[Sri C. Subramaniam] [17th December 1954

taken into consideration. Some films may be considered to be good and some may be considered to be bad. But that should not be used as an argument for condemning every film that has been produced by the Films Division of the Government of India. As admitted by hon. Members themselves, there are so many good films. Perhaps some films are not as good as the others. But that should not be made an argument to say that we should not ask the licensees to exhibit those films. I hope the matter will be settled amicably and without compulsion so far as this State is concerned.

" I am accepting the amendment moved by Sri Palaniyandi. Sri Palaniyandi will give the names of the Members of the Select Committee."

SRI M. PALANIYANDI :—" The Select Committee may consist of the following Members :—

The Hon. Sri C. Subramaniam.
Sri K. Rajaram Naidu.
,, A. Muthuswamy.
,, A. K. Masilamany Chettiar.
,, O. Venkatasubba Reddi.
,, P. M. Munuswamy Gounder.
,, K. Venkatramana Gowda.
,, P. Chellathurai.
,, A. Sambasivam.
,, K. P. Kuttikrishnan Nair.
,, H. M. Jagannatham.
,, P. Jeevanandam.
,, S. Ramalingam.
,, C. H. Kanaran.
,, A. Ratnam.
,, M. Palaniyandi.
,, O. Koran.
,, T. Shanmugam.
,, R. Rangaswamy Gounder.
,, K. R. Sambandam."

The amendment of Sri M. Palaniyandi was put and carried.

The amendment of Sri S. Swayamprakasam was, by leave, withdrawn.

MR. SPEAKER :—" I nominate the Hon. Sri C. Subramaniam to be the Chairman of the Select Committee."

VI.—HALF-HOUR DEBATE *RE*

STOPPAGE OF STIPENDS TO THE MADRAS STATE STUDENTS IN THE TRAINING SCHOOL AT PRODATOORPET, CHITTOOR DISTRICT.

MR. SPEAKER :—" Sri K. Vinayakam will initiate the debate."

17th December 1954]

* **SRI K. VINAYAKAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, நான் சொல்லப்போகிற விஷயம் இரண்டு அரசாங்கத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால், இந்த விஷயத்தில் எந்த அளவுக்கு பொருப்பு எடுத்துக் கொண்டு நான் பேசவேண்டுமோ அந்த அளவுக்கு பொருப்பு எடுத்துக் கொண்டுதான் பேசுகிறேன். இங்கிருக்கும் அங்கத்தினர்கள் தயவு செய்து கவனித்துக்கேட்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்." 6-56 p.m.

SRI A. GOVINDASAMY NAYAGAR :—" There is no quorum, Sir."

MR. SPEAKER :—" கோரம் இருக்கும், பயப்படாதீர்கள்."

* **SRI K. VINAYAKAM** :—" திருத்தணி தாலூகா (சித்தூர் ஜில்லா) ப்ரொடட்டூர் தமிழ்ப் போதனு முறைப் பள்ளியிலிருந்து ஸ்ரீ ஈ. எஸ். சுப்பிரமணியம் என்பவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறூர். தமிழ் ஆசிரியர்களேத் தயார்செய்வது மேற்படி பள்ளிக்கூடத்தின் நோக்கமாகும். அங்கு இப்பொழுது ஹயெர் கிரேடு ஆசிரியர்களும், செக்கண்டெரி கிரேடு ஆசிரியர்களும் தமிழில் பயிற்சி பெறுகிறூர்கள். அந்தப் பள்ளிக்கூடம் ஏற்பட்டதற்குக் காரணம் அப்பகுதியில் தமிழ் மக்கள் அதிகமாக இருப் பதும், தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இல்லாததும்தான் காரணம். தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இல்லாத காரணத்தால் தமிழர்கள் தெலுங்கைப் படிக்க வேண்டிய கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. அப்பொழுது பள்ளிக் கூடங்களே வைப்பதற்கு அங்கிருக்கிற ஜில்லா போர்டோ, அன்றைய சர்க் காரரோ முயற்சி எடுத்துக்கொள்ளாத காரணத்தால் தனிப்பட்ட மாண வர்கள் தங்களுடைய பணத்தைச் செலவு செய்து இந்தப் பள்ளியைத் துவக்கினூர்கள். அப்பொழுது மொழி அடிப்படையில் இரண்டு அரசாங் கங்களும் பிரியவில்லே. பிரிக்கப்படாத சென்னே ராஜ்யத் (Composite Madras State)தில் இன்று இருக்கக்கூடிய கல்வி அமைச்சர் இருக்கும் போது, எங்களுக்கு அந்தப் பள்ளியைவைப்பதற்கு அனுமதி தந்தார். அப்பொழுதிலிருந்து அங்கு ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள்.

" இதற்கிடையே மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் பிரிந்தன. சித் தூர் ஜில்லா தகராறுக்கிடமான பகுதி (**disputed area**) ஆக இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கமே தகுந்த முயற்சி எடுத்து கணக்கு களேச் சேகரித்து, எல்லேக் கமிஷனின் ஆலோசனேக்கு விட்டிருக்கிறது. அங்கிருக்கும் தமிழ்ப் பயிற்சி மன்றத்தில் தமிழ் படித்த மாணவர்கள் ஆசிரியர்களாகப் பயிற்சிப் பெற்று, பிறகு அப்பகுதியிலுள்ள தமிழ் பள்ளிக்கூடங்களுக்குப் பயன்பட்டு வந்தார்கள். அப்படியிருக்கும்போது மொழி அடிப்படையில் ராஜ்யம் பிரிந்தபிறகு இந்தப் பள்ளிக்கு என்ன வேலே என்ற முறையில் ஆந்திர அரசாங்கம் ஒரு உத்திரவிட்டிருக்கிறது. அதாவது:—'**Consequent on the formation of the Andhra Province there is no necessity for such a Tamil institution in this area**' என்று திட்டவட்டமாக ஒரு உத்திரவைப் போட்டிருக்கிறது. பள்ளிக் கூடத்தை மூடி விட வேண்டு மென்று ஆந்திர அரசாங்கம் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறது. அந்த அறிக்கை என்னிடம் இருக்கிறது. அதை இங்கே வாசிக்க விரும்பவில்லே. யாருக்காவது சந்தேகம் இருந்தால் காட்ட விரும்புகிறேன். ஆந்திர சர்க்கார் அந்த நிலேமையில் இருந்து வருகிறது. அவர்களேப்பற்றி குறை கூறுவதற்கு நான் விரும்பவில்லே."

MR. SPEAKER :—" குறை கூற முடியாது. அது அவர்கள் ராஜ்யத் தைப் பொறுத்தது."

* **SRI K. VINAYAKAM** :—" ஆகையால் நான் பொறுப்புடன் சொல்லு கிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் நிலேமையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதே நோத்தில் தெலுங்கு படிக்கும் மாணவர்கள் நம் ராஜ்யத்தில் இருக்கிறூர்கள். ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு படிக்கிறூர்கள், பல பள்ளிக்கூடங்களில். அவர்களுக்கு நாம் சலுகை காட்டுகிறேம். இரு ராஜ்யங்களுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் இருக்கிறது.

ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குச் இன்ஜினீரிங், மெடிகல், சட்டக் கல்லூரிகளில் நாம் இடம் தந்து இலவசமாக சம்பளம் தந்து . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இலவசமாக சம்பளம் கொடுப்பதில்லை."

*SRI K. VINAYAKAM :—" ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நம் ராஜ்யத்திலுள்ள கல்லூரிகளில் நாம் இடம் கொடுத்து வருகிறோம். ஆனால், ஆந்திர அரசாங்கம், தமிழ்ப் பள்ளிக்கூடம் அங்கு இருக்கக்கூடாதென்று சொல்லி மூடி விட வேண்டுமென்று உத்தர
7 p.m. விட்டிருக்கிறார்கள். ராஜ்யம் பிரிவதற்கு முன்னால் அங்கு சேர்ந்த மாணவர்கள் இப்பொழுது சீனியர் வகுப்பில் இருக்கிறார்கள். இரண்டு வருஷம் படிக்க வேண்டும். மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் பிரியாத போது அங்கு சேர்ந்த மாணவர்கள் இப்பொழுது சீனியர் வகுப்பில் இருக்கிறார்கள்."

SRI A. GOVINDASAMY NAYAGAR :—" There is no quorum, Sir."

MR SPEAKER :—" என்னையும் சேர்த்து எண்ணியிருக்கிறீர்களா ?

SRI K. VINAYAKAM :—" கனம் அங்கத்தினர் தமிழுக்குக் காட்டுகிற அக்கறை இவ்வளவுதான்."

MR. SPEAKER :—" கோரம் இருக்கிறது."

*SRI K. VINAYAKAM :—" மொழிவாரி அடிப்படையில் ஆந்திர ராஜ்யம் பிரிக்கப்படுவதற்கு முன் திருத்தணியிலுள்ள ப்ராதட்டூரில் உள்ள பயிற்சிப் பள்ளியில் தமிழ் மாணவர்கள் சேர்ந்திருந்தார்கள். இம்மாதிரியாக இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொல்லை அப்பொழுது வரும் என்று அவர்களுக்குத் தெரியாது. அப்பொழுது ஆந்திர அரசாங்கம் என்ன உதவி கொடுத்தார் தெரியுமா? 'நீங்கள் உங்கள் ராஜ்யத்திற்கே போய்விடுங்கள். ஆந்திர பள்ளிக்கூடத்தில் படித்தால் இலவசமாக சம்பளம் கொடுக்கமாட்டோம். கிராண்ட் கிடையாது' என்ற உத்திரவு போட்டிருக்கிறார்கள். அது தவறு, நியாயமற்றது என்று நம் அரசாங்கம் ஆந்திர அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கு இருக்கும் நிர்வாகஸ்தர் என்னைப்போல் உள்ளவர்களும் கல்வி மந்திரியைக் கண்டு குறைபாடுகளை எடுத்துச் சொல்லி என்ன செய்வது என்று அவரைக் கேட்டோம். அதற்கு அவர் நம்முடைய அரசாங்கம் ஆந்திர அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறது என்று சொன்னார். அப்படி எழுதிய கடிதத்திற்குப் பதில் வந்திருக்கிறதா என்றால் இல்லை. ஜூலை மாதத்தில் எழுதிய முதல் கடிதத்திற்கு பிறகு இதுவரை எட்டு ரிமைன்டர்கள் நமது சர்க்கார் அனுப்பி இருக்கிறார்கள். இரண்டு தந்திகளும் அனுப்பி இருக்கிறார்கள். இது வரையிலும் எந்த விதமான பதிலும் கர்நூலிலிருந்தும், ஆந்திர சர்க்காரிடமிருந்தும் வரவில்லை. ஆனால் வேறு கடிதங்களுக்கு மாத்திரம் ஆந்திர சர்க்காரிடமிருந்து உடனுக்குடன் பதில் வந்து கொண்டுதான் இருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது பணம் சேர வேண்டும், நம்மிடமிருந்து ஏதாவது பாக்கி சேர வேண்டும் என்பதற்கெல்லாம் கடிதம் வருகிறதே தவிர 'நமக்கு சலுகை, நமது தமிழ் மாணவர்களுக்கு முறைப்படி கொடுக்க வேண்டிய சலுகை வேண்டுமென்று கேட்டால் அதற்குப் பதில் கிடையாது. அன்று ஆந்திர அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறது மொழி அடிப்படையிலே பிரியும்போது எந்த நிலையிலே இருந்ததோ அதை அப்படியே வைத்திருப்பதுதான் முறை. எல்லைக் கமிஷன் தீர்ப்பிற்கு பிறகு பின்னால் எதைச் செய்தாலும் பரவாயில்லை. அதுவரை ஏற்கனவே இருக்கக்

17th December 1954] [Sri K. Vinayakam]

கூடிய நிலைமையை மாற்றக் கூடாதென்றுதான் நமது சர்க்கார் எழுதி இருக்கிறார்கள். அதைக்கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் ஒரு ஷரத்தும் சேர்த்திருக்கிறார்கள். 'மாணவர்கள் பயிர்ச்சிப் பள்ளியில் சேர்ந்துக் கொள்ளும் விஷயத்தில் நீங்கள் தலையிட்டு தமிழ் மாணவர்கள் படிப்பதைத் தடுக்கக்கூடாதென்று' நமது அரசாங்கம் எழுதி இருக்கிறது. அதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. சீனியர் வகுப்பில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள் இவ்வாறெல்லாம் ஆந்திர சர்க்காரில் நடக்கும் என்று அவர்கள் நினைக்கவில்லை. இன்றைக்கு தமிழ் மாணவர்கள் ஸ்டைபண்ட் இல்லாமல் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாதத்திற்கு 18 ரூபாயாக கொடுக்ககூடிய பணத்தை அவர்களுக்கு கொடுக்கப்பட வில்லையென்றால், அந்தப் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் செலவிற்கு எங்கே போவார்கள்? கனம் கல்வி அமைச்சருக்கு அவர்கள் கஷ்டப்படுவது நன்கு தெரியும். பள்ளிக் கூடம் திறந்து 8 மாதம் ஆகியும் இன்னும் ஒருவருக்கும் ஸ்டைபண்ட் கொடுக்கவேயில்லை. அப்படியிருக்கும்போது ஆந்திர சர்க்கார் சொல்லுகிறது 'எங்கள் ராஜ்யத்தைச் சேர்ந்த சித்தூர் தமிழர்கள் இங்கு பள்ளியில் படித்தால் நாங்கள் அவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுக்க தயாராயிருக்கிறோம்' என்று சொல்லுகிறார்களே தவிர நம் ராஜ்யத்திலிருந்து அங்கு போய் சீனியர் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு கொடுக்க மறுக்கிறார்கள்.

"ஆனால் நம்முடைய அரசாங்கம் நன்கு அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. எங்கள் ராஜ்யத்திலிருந்து போய் படிக்கும் மாணவர்களுக்கு நாங்கள் பணம் தருகிறோம் என்று நிதி அமைச்சர் ஒத்துக் கொண்டிருக்கிறார். அங்கு படிக்கும் தமிழ் மாணவர்களும் அதை வரவேற்கிறார்கள். அனந்தப்பூரில் உள்ள என்ஜினீயரிங் காலேஜும் அதே நிலைமையில்தான் இருக்கிறது. காகிநாடாவில் உள்ள ஜூனியர் வகுப்பில் படிக்கும் மாணவர்களும் அதே நிலைமையில்தான் இருக்கிறார்கள். அவைகளைப் பற்றி எல்லாம் நமது நிதி அமைச்சர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆந்திர சர்க்காருக்கு எழுதும்போது "To maintain *status quo* as far as he admission of students are concerned என்று நம்முடைய அரசாங்கம் எழுதி இருக்கிறது. அங்குள்ள மாணவர்களும் சென்னை சர்க்கார், நம்மை கவனித்துக் கொள்ளுவார்கள், நமது சர்க்கார் நம்மைக் கைவிடாது என்று நினைத்துத்தான் நம்முடைய ராஜ்யத்தில் இருப்பவர்கள் அந்த ராஜ்யத்தில் போய்ச் சேர்ந்தார்கள். நம் ராஜ்யத்திலிருந்து 120 மாணவர்கள் அங்கு படித்துக்கொண்டு வருகிறார்கள். கஷ்டம் இருக்கிறதென்று தெரிந்தும் ஏன் அவர்கள் அங்குப்போய்ச் சேர்ந்தார்கள் என்று நிதி அமைச்சர் கேட்கலாம். ஆனால் அந்த மாணவர்கள் இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இப்படிப்பட்ட கஷ்டங்களை நமது மாணவர்கள் அனுபவிக்கவேண்டுமென்று சொன்னால் அந்த நிலைமைக்குத் தமிழ் மாணவர்களை விடுவது நியாயம் ஆகுமா என்று நான் மன்றாடி கேட்கிறேன். மற்ற இடங்களில் இருக்கக் கூடிய பயிற்சி மன்றங்களில் அவர்களுக்கு இடம் கிடைத்திருந்தால் வட ஆற்காட்டிலிருந்தும், தென் ஆற்காட்டிலிருந்தும், செங்கற்பட்டிலிருந்தும் மாணவர்கள் சித்தூர் மாவட்டத்திற்கு ஏன் போய் படிக்கப் போகிறார்கள்? நம் ராஜ்யத்தில் இடம் கிடைக்காததினால் அவர்கள் படித்து ஆசிரியர் ஆகவேண்டுமென்ற காரணத்தினால் ஆந்திர ராஜ்யத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். இங்கு இடம் கிடைக்காததினால் அங்கு போய்ச் சேர்ந்தார்களே தவிர, இங்கு இடம் கிடைத்து அங்கு போகவில்லை. ஆதலால் அவர்களுக்கு உதவியளிப்பது நமது கடமையாகும். அப்படிச் செய்வது நியாயத்திற்கு விரோதமாகத் தோன்றவில்லை. ஆகையால் இவைகளையெல்லாம் கவனித்து நம் தமிழ் மாணவர்களுக்கு உடனடியாக ஸ்டைபண்ட் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் ஒரு ஆண்டு அல்லது 6 மாதத்திற்குள் மாணவர்கள் எப்படியும் நம்முடைய அரசாங்கத்திற்குத்தான் வரவேண்டும். ஸ்டைபண்ட் வந்தால் அவர்கள் இந்த ராஜ்

யத்தில் ஆசிரியராக வேலை செய்யத்தயார் என்று பாண்ட் எழுதிக் கொடுக்கவும் தயாராயிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் அங்கு படிக்கும்போது பணவசதி அளித்து, நம் ராஜ்யத்தில் உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டால் தவறு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். **On the other hand, the Government of Madras must thank the institution for training teachers coming from our territory.** ஆகையால் நான் தமிழரசுக்கழகம் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன், தமிழகம் மாணவர்கள் சார்பிலும், ஆசிரியர்கள் சார்பிலும் கேட்டுக் கொள்ளுகிறேன், தமிழ் நாடு நன்றாக இருக்க வேண்டு மென்ற எண்ணத்துடன் நமது அரசாங்கம் ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். டெக்னிகல் அப்ஜெக்ஷன் இருக்கும் என்று அமைச்சரும் அரசாங்கமும் நினைத்தால் மாணவர்களின் நன்மைக்காக அதை மீறிப் போவதால் யாரும் தவறு என்று சொல்லமாட்டார்கள். இந்த ஆண்டு மாத்திரம் கொடுத்து விட்டால் இன்னொரு ஆண்டு கொடுக்காவிட்டால் போகட்டும். இந்த ராஜ்யத்தில் இருக்கிற மாணவர்களை சேர்க்க மாட்டோம், அப்படி சேர்ந்தால் அவர்களுக்கு ஸ்டைபண்ட் இல்லாமற் போனாலும் பரவாயில்லை. இப்போது நமக்கு உதவி செய்வார்கள் என்று நினைத்து இந்த சர்க்கார் ஆந்திர சர்க்காருக்கு எழுதியிருக்கிறது. ஆந்திர சர்க்கார் நமக்கு பதில் தருவார்கள் என்று நினைத்தோம். பதில் தருவார்கள், நன்மை செய்வார்கள் என்றுதான் மாணவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். இங்கு இருக்கக்கூடிய தெலுங்கு பள்ளிகளை இந்த சர்க்கார் மூடவில்லை. தாராள மனப்பான்மையுடன் இந்த ராஜ்யமக்கள் நடந்துக் கொண்டிருக்கும்போது, நம்முடைய ராஜ்யத்திலிருந்து அங்கு போய் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு நாம் உதவி செய்வதில் அநியாயம் இல்லை. ஆகவே தயவு செய்து இது ஒன்று மாத்திரம் நமது அரசாங்கம் செய்தால் போதும். சீனியர் மாணவர்களுக்கு ஸ்டைபண்டு தருகிறோம் என்று சொல்லி ஜூனியர் மாணவர்களுக்கு அது கிடையாது என்று சொல்வது சரியல்ல. ஆகவே இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து சர்க்கார் ஆவன செய்வார்களேயானால் அது தமிழுக்கே செய்கிற ஒரு பெரிய தொண்டு என்றுதான் நான் நினைப்பேன். இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் கனம் நிதி அமைச்சர் அவர்களை நல்ல முறையிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்க வழி செய்ய வேண்டும் என்று தூண்டுவார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்."

7–10 p.m. * **Sri M. KALYANASUNDRAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தில் கனம் நிதி மந்திரி அவர்கள் அதிகமான விவாதத்திற்கு இடம் வைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏற்கனவே இந்த விஷயத்தில் இருக்கும் நியாயத்தை உணர்ந்து மாணவர்களுக்கு சர்க்கார் தாங்களாகவே ஸ்டைபெண்ட் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். ஆனால் அதற்குக் குருக்கே இடையூராக இருப்பது ஆந்தர ராஜ்யம்தான். நம்முடைய சர்க்கார் அவ்விதம் நியாயத்தை உணர்ந்து அவர்களுக்கு (மாணவர்களுக்கு) ஸ்டைபெண்ட் தொகை கொடுக்க முன் வந்ததற்கு நான் நம்முடைய சர்க்காரை பாராட்டுகிறேன்.

" இந்த வருஷம் சேர்ந்த மாணவர்களும் பயிற்சி பெற்று வந்தவுடன் அவர்களுக்கும் வேலை கொடுக்க நம் சர்க்கார் முன் வரவேண்டும். அத்துடன் இப்பொழுது திரும்பி வரும் மாணவர்களுக்கும் அவர்கள் வந்தவுடன் அவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்க வேண்டும். அந்த நிலையில் அவர்களுக்கு இந்த சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை நான் சொல்லுகிறேன். அந்த விஷயத்தை ஆலோசனை செய்து அதன்படி நடக்க வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" இப்பொழுது அங்கு கவர்னர் ஆட்சி நடைபெறுகிறது. அதனால் நம்முடைய காரியத்தை சுலபமாக முடித்துக் கொள்ளலாம். என்று நினைக்

17th December 1954] [Sri M. Kalyanasundram]

கிறேன். இருக்கும் சிக்கல்களை தீர்ப்பதற்கு இதுதான் சமயம். இங்கு அரசாளும் கட்சியேதான் அங்கு அரசாட்சி செய்து வந்தது. அதனால் நம்முடைய சிக்கல்கள் தீர முடியாமலிருந்தாலும், இப்பொழுது கவர்னர் ஆட்சி நடப்பதால் இன்னும் சௌகர்யமாக தீர்த்துக் கொள்ளலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். சமீபத்தில் பொதுத் தேர்தல் நடக்கப் போகிறது. அப்பொழுது கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்தாலும் ஆந்திராவிலுள்ள தமிழர்களுடைய பிரச்னைகள் எல்லாம் சுமுகமாக தீர்ந்து விடும். அதையும் நம்முடைய கனம் மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் பார்ப்பார் என்றே நினைக்கிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, what is the use of wishing for an impossible thing that the Communist Party will come into power and that I will have all the advantages of reasonable treatment from them? It is just like wishing almost for the moon.

" But that apart, the hon. Member Sri Vinayakam appealed to me in the name of Tamil language. But it has absolutely nothing to do with this matter. This is a human problem and I have to view it with human sympathy. That is all. The hon. Member Sri Vinayakam need not be under the impression that by taking interest in this matter, he is doing some service to the Tamil language as such. Certainly, when persons are in difficulty, we are bound to go to their help and as such, he may take credit that he has gone to the help of those who are suffering on account of certain unavoidable circumstances which are beyond their control. But as far as the students in the senior class are concerned, I have already given the assurance and the matter is very simple because the Andhra Government are bound to conduct the examinations for them in their own State. But as far as the students in the junior class are concerned, the Andhra Government have already decided to abolish the course of training of Tamil teachers there. Therefore, difficulty will arise as to how the students studying in the junior class are going to sit for the examinations. So, difficulty will arise in their case. As far as that is concerned, I am prepared to go into the whole matter and also have consultations with the Andhra Government. Whatever is possible, certainly, I will try my best to do. The hon. Member Sri Vinayakam need not be under the impression that we do not want to help these people. Unfortunately, in dealing with another State, difficulties arise. All those technical difficulties will have to be taken note of. But, I am hoping that, with the goodwill of the Andhra Government, it would be possible to arrive at a reasonable settlement in this matter. I hope the hon. Member Sri Vinayakam will be satisfied with this assurance and that through him the persons concerned also will have some solace as far as their representation is concerned."

MR. SPEAKER :—" The House will now adjourn and meet again at 11 a.m. on Monday, the 20th December 1954."

The House then adjourned.